**செ. கு. எண்: 160** **நாள்: 14.09.2018**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின்</u>

<u>அறிக்கை – 14.9.2018</u>

காஞ்சிபுரம் மாவட்டம், பல்லாவரத்தைச் சேர்ந்த திரு. ராமச்சந்திரன் என்பவருடைய மனைவி திருமதி ருக்குமணி மற்றும் அவருடைய உறவினர்கள் என மொத்தம் நான்கு நபர்கள் காரில் திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், ஜம்பங்கிபுரம் கிராமத்தில் அமைந்துள்ள முத்துமாரியம்மன் கோவிலுக்கு செல்லும் வழியில், திரு. சிவா என்பவரிடம் கோவிலுக்கு செல்லும் வழி கேட்கும் போது அவர் சந்தேகமடைந்து, காரில் வந்தவர்களை தாக்கியதில், காரில் பயணம் செய்த திருமதி ருக்குமணி மற்றும் திரு. கஜேந்திரன் ஆகிய இருவரும் பலத்த காயமடைந்து, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த திருமதி ருக்மணி மற்றும் திரு. கஜேந்திரன் ஆகிய இரண்டு நபர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த திருமதி ருக்மணி மற்றும் திரு. கஜேந்திரன் ஆகிய இரண்டு நபர்களின் குடும்ப வறிய நிலையை கருத்தில் கொண்டு சிறப்பினமாக தலா ஒரு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**

தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**